முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29 திகதி முதல்
சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 திகதி வரை
(16.10.2022 ஞாயிறு முதல் 23.10.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானயுகம் படைக்க வேண்டி
ஞானபண்டிதன் அவதாரமாக வந்த
ஞான தேசிகனை போற்றி இனிதே
ஞாலமதில் அகத்திய மகரிஷி யானும்
2. யானும் இந்தியா தமிழகத்தின்
எதிர்கால பலன் குறித்த ஆசி
ஞானமுள சுபகிருது தரிவைதிங்கள் இருபான்நவ திகதி மேல்
நல்துலை திங்கள் சஷ்டி திகதி வரை நடக்கும்
3. நடக்கும் வார நிகழ்வாக உரைப்பேன்
நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும்
இடரான ஊழல் மலிந்த நிலை
இனியேனும் தொடரா வண்ணம் தடுத்து
4. தடுத்து ஆளுமை சக்திகள்
தக்க நடவடிக்கை எடுத்து
இடரின்றி எல்லாத் துறைகளும்
எளிமைபட மக்கள் சேவைதனை
5. சேவைதனை இலகுவாக்கி நன்கு
செயல்பாட்டினை கண்டு வருக
அவனியில் இந்தியா தமிழகம்
அனைத்துத் துறைகளிலும் ஞானவான்களாக
6. ஆகவே தலைமைகள் பெருகி
அவலம் அரசுக்குப் பற்றாவண்ணம்
மிகைபட பாதுகாப்புப் பெருகும்
மேலான வளர்ச்சிகளும் காண்கும்
7. காண்கவே அனைத்துத் துறைவாரி
கடமையாற்றும் மேலவர்கள்
உண்மை நிலை அறிந்து உயர
உயர் ஞானி அரங்கன் தானதரும
8. தானதரும நெறி வழி கண்டு
தக்கபடி பின்பற்றி இனிதே
ஞானபண்டிதனை வணங்கி
நம்பிக்கை வைத்துத் தொடர

9. தொடரவே தேசநலம் காக்கும்
துறைகளாகத் தலைமைகளெல்லாம்
இடரின்றி உண்மைசேவை ஆற்றி
இந்தியா தமிழகம் தானும் உலகே
10. உலகே வியக்க ஞானத்தலைமை
உருவாகி ஞான ஆட்சி மலரும்
மலரும் வளரும் மக்களின் பாதுகாப்பாய்
மாற்றம் கண்டு தலை நிமிரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29ம் நாள் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 06 ம் நாள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

இவ்வுலகினில் துன்பம் மிக்க கலியுகத்தை மாற்றி தூய்மையான, ஞான யுகத்தினை படைத்து மக்களை தர்மநெறி வழி நடத்திட வேண்டியே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை போற்றி அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் புரட்டாசிமாதம் 29ம் நாள் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 06 ம் நாள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்களுக்கு துன்பம் அளிப்பதோடு நாட்டின் வளர்ச்சியை பாதிக்கின்ற ஊழல் மிகுந்த இந்தவித நிலையினை இனிமேலும் தொடராதவாறு நாட்டை ஆள்வோர் தகுந்த முறையில் தடுத்து ஊழல் செயல்களை கட்டுப்படுத்திட வேண்டும். எல்லா துறைகளும் எளிமைபட நடந்து மக்களக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் நடப்பதுடன் மக்களுக்கான சேவைகளை எனிதாக்கி நன்கு செயல்பட்டு வந்தால் இந்த உலகிலேயே இந்தியா தமிழகம் எல்லா துறைகளிலும் ஞானவான்கள் நிறைந்த நாடாக ஞானிகளின் ஆசி பெற்ற நாடாக ஆகி நாட்டிற்கு எந்தவித துன்பமும் இல்லாத வாறு சூழ்நிலைகள் பெருகி நாடும் நாட்டு மக்களும் எல்லா விதமான பாதுகாப்பையும் பெறுவார்கள் அதீத வளர்ச்சியை நாடு அடையும்.

நாட்டின் அனைத்து துறைகளிலும் உள்ள மேலதிகாரிகளும், பொறுப்பில் உள்ளவர்களும் எது உண்மை என்பதை உணர்ந்து உண்மை நிலை அறிந்து உயர வேண்டும். ஆகவே இவ்வுலகினில் தர்மநெறி போதித்து வளர்க்கும் உண்மை ஞானி ஆறுமுக அரங்க மகான்கூறும் தானதரும நெறிகளை ஏற்று அதை உணர்ந்து தான தரும நெறிவழி நடப்பதுடன் உண்மை ஞானம் அருளும் முருகப்பெருமானை வழிபடு கடவுளாக ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானைநம்பிக்கையுடன் வழிபாடுகளை தவறாது தொடர்ந்து செய்து வரவர அவர்கள் பதவி வகிக்கும் துறைகள் எல்லாம் உயரும். தலைமைகள் தடையின்றி உயர் சேவைகளை செய்வார்கள் இந்தியா தமிழகம் நல்ல பாதுகாப்பை பெறுவதுடன் உலகமே வியக்குமாறு தேசத்தில் ஞானத் தலைமை உருவாகி ஞான ஆட்சி மலர்ந்திடுமப்பா.

தலைமை பொறுப்பில் உள்ளோர் ஞானவான்களாக ஆகி ஞானத்தலைமை உருவாகி இந்தியா தமிழகம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து மக்களைக்காக்கும் மாபெரும் வல்லமைமிக்க தேசமாக ஆகி உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–